<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>C.C. No. 61/2025</u>

<u>24.06.2026</u>

<u>LW : 7 PW : 6</u>

2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 24 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4 ன் படி திருமதி. Dr. R. லதா, M.A.,M.L.,Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

**<u>திரு. பன்னீர்செல்வம், த/பெ. குழந்தைவேலு</u>**

**<u>எதிரிகள் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. சாட்சி திரு.பன்னீர்செல்வத்தை பொருளாதார குற்றப்பிரிவு தலைமை காவலர் A. பிரசன்னா HC No. 631 அடையாளம் காட்டினார்.</u>**

**<u>முதல்விசாரணையின் தொடர்ச்சி</u>**

**<u>கையாடல் இனம் 17</u>**

25.07.2013 ல் நிர்வாகக்குழு கூட்டத்திற்கு வருகை தராத நிர்வாகக்குழு உறுப்பினர்களிடம் பற்றுச்சீட்டு பெறாமல் அவர்களுக்கு அமர்வுப்படி வழங்கியதாக பொய் கணக்கு எழுதி கையாடல் செய்யப்பட்டுள்ளது.

1) ப்பி. சத்தியமூர்த்தி ரூ.100/-

2) எஸ். மலர்விழி ரூ.100/-

ஆகக்கூடுதல் ரூ.200/- கையாடல் செய்யப்பட்டுள்ளது.

பாமணி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் நிர்வாகக்குழு கூட்டம் 25.07.2013 ந் தேதியில் நடைபெற்றுள்ளது. இக்கூட்ட தீர்மானம் தீர்மானப்புத்தகம் பக்கம் எண்.49 ல் சங்க செயலாளர் பொறுப்பால் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதில் வருகை ஆர். ஜெயபால் தலைவர் மற்றும் 10 நிர்வாகக்குழு உறுப்பினர் என எழுதப்பட்டுள்ளது. இந்த பக்கத்தில் தீர்மானம் எண்.1, 2 மற்றும் 3 பதியப்பட்டுள்ளது. தீர்மானப்புத்தகம் பக்கம் எண்.50 ல் தீர்மானம் எண்.7 ல் நிர்வாகக்குழுக் கூட்டத்திற்கு வருகை தரும் நிர்வாகக்குழு இயக்குநர்களுக்கு அமர்வுப்படி ரூ.100/- வழங்குவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதற்கு கீழே தலைவர் மற்றும் 8 உறுப்பினர்கள் மட்டுமே கையொப்பமிட்டுள்ளனர். இவற்றால் இக்கூட்டத்தில் இச்சங்கத்தில் நிர்வாகக்குழு உறுப்பினராக உள்ள ப்பி. சத்தியமூர்த்தி மற்றும் திருமதி. எஸ்.மலர்விழி ஆகிய இருவரும் கலந்து கொள்ளவில்லை என்பது தெளிவாக தெரிகிறது. ஆனால் இவ்விருவர்களிடமும் பற்றுச்சீட்டு பெறாமல் 25.07.2013 ல் இருவருக்கும் ரூ.100/- வீதம் அமர்வுப்படி வழங்கியதாக பொய்யாக கணக்கு எழுதி சங்க நிதியில் ரூ.200/- கையாடல் செய்யப்பட்டுள்ளது. **வரிசை எண்.6 தீர்மானப்புத்தகம் பக்கம் 49 மற்றும் 50 அ.த.சா.ஆ.149 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

இது தொடர்பாக நிர்வாகக்குழு உறுப்பினர் திரு.ப்பி. சத்தியமூர்த்தியை 06.06.2015 ல் விசாரித்ததில் அவரது வாக்குமூலம் பக்கம் எண்.8 ல் 25.07.2013 தேதிய நிர்வாகக்குழு கூட்டத்தில் தான் கலந்து கொள்ளவில்லை என்பதையும் இந்த ரூ.100/- தான் பெற்றுக்கொள்ளவில்லை என்வும்

அதற்கான பற்றுச்சீட்டு தான் கையெழுத்து போட்டு கொடுக்கவில்லை என்பதையும் உறுதி செய்கிறேன் எனவும் தெரிவித்துள்ளார். **என்னிடம் காட்டப்படும் வாக்குமூலம் திரு.ப்பி. சத்தியமூர்த்தியின் வாக்குமூலம் ஆகும். வரிசை எண்.55 06.06.2015 ல் திரு.ப்பி. சத்தியமூர்த்தி கொடுத்த வாக்குமூலம் அ.த.சா.ஆ.150 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

அவ்வாறே திருமதி. எஸ். மலர்விழி தனது 20.05.2015 தேதிய வாக்குமூலம் பக்கம் எண்.2 ல் 25.07.2013 கூட்ட தீர்மானத்தில் தான் கையொப்பமிடமில்லை எனவும், தான் பற்றுச்சீட்டு கையொப்பமிட்டுக் கொடுத்து அமர்வுப்படியாக ரூ.100/- அன்றைய தினம் பெற்றுக்கொள்ளவில்லை எனவும் உறுதி செய்துள்ளார். **என்னிடம் காட்டப்படும் வாக்குமூலம் திருமதி. எஸ். மலர்விழி வாக்குமூலம் ஆகும். வரிசை எண்.48 20.05.2015 ல் திருமதி. எஸ். மலர்விழி கொடுத்த வாக்குமூலம் அ.த.சா.ஆ.151 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவற்றால் சட்டப்பிரிவு 84 ன் படி முறையாக கணக்கு எழுதுவதை உறுதி செய்துவரவேண்டியது எதிரி 1 தினகரனின் தலையாய கடமையாகும். இதனையே வலியுறுத்தி சங்க தனி அலுவலர் 05.08.2011 ல் நிர்ணயித்துக் கொடுத்துள்ள கடமைகளும் பொறுப்புகளையும் பற்றிய ஆணைய இவர் 05.08.2011 ல் பெற்றுள்ளார் என்பதுடன் அந்த ஆணையில் சங்க எழுத்தர் வி.குமார் என்பவருக்கு துணை தினக்குறிப்பு பற்று மற்றும் வரவு பேரேடுகளையும் மற்றும் ரொக்கப்புத்தகத்தையும் எழுதி வரவேண்டும் என திட்டவட்டமாக இந்த ஆணையில் குறிப்பிட்டுள்ளதை எதிரி 3 வி.குமார் செயல்படுத்த தவறியுள்ளார்.

இதுகுறித்து எதிரி 1 தினகரனை விசாரித்தபோது அவர் தனது வாக்குமூலம் 07.07.2015 ல் பக்கம் எண்.3 ல் வி.குமார் வரவு செலவுப் பதிவேடுகளை எழுதவில்லை ஏனெனில் தான் சொன்ன வேலைகளை அவர் செய்ய முன்வரவில்லை எனவும், துணைதினக்குறிப்பு பேரேடுகளை தினப்பேரேடு (ரொக்கப்புத்தகம்) ஆகியவற்றை எழுதவில்லை என்பது குறித்து எழுத்தர் வி.குமார் மீது நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்பதை தனது வாக்குமூலம் பக்கம் எண்.4 ல் ஒப்புக்கொண்டுள்ளார். மேலும், சங்கத்தில் பணியாற்றும் இதர இரண்டு எழுத்தர்களும் தனது கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருவார்கள் என்பதும் அவர்களது பணிகளை கண்காணித்து வருவதும் தனது பொறுப்பு என்பது தனக்கு தெரியும் என பக்கம் எண்.2 ல் ஒப்புக்கொண்டுள்ள இவர் எழுத்தர் வி.குமார் தனி அலுவலரின் ஆணையை செயல்படுத்த மறுத்திருப்பாரேயானால், அது குறித்து சங்க தலைவருக்கு குறிப்பு எழுதி அனுப்பி இவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க எழுத்துமூலமாக பரிந்துரை செய்து சங்க தலைவரின் கவனத்திற்கு கொண்டு சென்று நடவடிக்கை எடுக்க இவர் ஏற்பாடு செய்திருக்கவேண்டும்.

ஆனால் அவ்வாறு எதிரி தினகரன் செயல்பட தவறியுள்ளார் என்பதையும் தனது 07.07.2015 ந் தேதிய வாக்குமூலத்தில் பக்கம் எண்.8 ல் தனக்கு வேண்டிய நபரைக் கொண்டு துணைதினக்குறிப்பு பேரேடு வரவு கணக்கு மற்றும் பற்றுப்பேரேடு கணக்குகளையும் எழுதச் செய்துள்ளேன் எனவும், அதனால் தான் எவர் ஒருவரும் அதில் கையொப்பம் இடவில்லை என்பதும், தானும் அதில் கையொப்பம் இடவில்லை எனவும், பக்கம் எண்.9 ல் ஒப்புக்கொண்டுள்ளார்.

ஆனால் துணை தினக்குறிப்பு பேரேடு வரவு மற்றும் பற்று பேரேட்டில் செய்யப்பட்டுள்ள பதிவுகளின் அடிப்படையில் ரொக்கப்புத்தகத்தை எழுதி முடித்து எதிரி தினகரன் கையொப்பமிட்டுள்ளார். இவற்றால், இவர் சங்கத்தின் ரொக்கப்புத்தகத்தின் வரவுசெலவுகளை தனி அலுவலர் ஆணைப்படி கூட்டுப்பொறுப்பாக செயல்படுத்தாமல், இவர் இவரது தனி பொறுப்பாக செயல்படுத்தி வந்துள்ளார். இது தொடர்பாக எதிரி தினகரனை விசாரித்ததில் அவர் தனது வாக்குமூலம் நாள் 07.07.2015 ல் பக்கம் எண்.53 ல் இவ்விருவரும் 25.07.2013 ந் தேதியில் நிர்வாகக்குழு கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை எனவும், அமர்வுப்படியாக ரூ.200/- ஐ பெற்றுக்கொண்டு பற்றுச்சீட்டு ஏதும் கொடுக்கவில்லை எனவும் இவ்வற்றால் ரூ.200/- கையாடல் செய்துள்ளார் என்பதை ஒப்புக்கொண்டுள்ளார். இத்தொகை துணைதினக்குறிப்பு பேரேடு பற்றுக்கணக்கு பேரேடு பக்கம் எண்.6 மற்றும் ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.25 ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. **வரிசை எண்.15 துணைதினக்குறிப்பு பேரேடு பற்றுக்கணக்கு பேரேடு பக்கம் எண்.6 அ.த.சா.ஆ.152 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம் பக்கம் எண்.25 அ.த.சா.ஆ.153 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

இவற்றால் எதிரி தினகரன் ரூ.200/- சங்க நிதியில் கையாடல் செய்துள்ளார் என்பது தெளிவாகிறது. ஆகையால் கையாடல் இனம் 1 முதல் 17 வரை உள்ள இனங்களில் மொத்த கூடுதல் தொகை ரூ.64,64,531/- சங்க நிதி கையாடல் செய்யப்பட்டுள்ளது.

**1) வரிசை எண்.6 தீர்மானப்புத்தகம், அது அ.த.சா.ஆ.154 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**2) வரிசை எண்.7 ரொக்கப்புத்தகம், அது அ.த.சா.ஆ.155 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**3) வரிசை எண்.12 உர விற்பனையாளர் உரச்சிட்டா, அது அ.த.சா.ஆ.156 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**4) வரிசை எண்.13 விதை நெல் விற்பனை சிட்டா 2014-2015, அது அ.த.சா.ஆ.157 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**5) வரிசை எண்.14 விதை நெல் விற்பனை சிட்டா 2013-2014, அது அ.த.சா.ஆ.158 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**6) வரிசை எண்.15 துணைதினக்குறிப்பு பேரேடு, அது அ.த.சா.ஆ.159 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**7) வரிசை எண்.21 உர இருப்பு பதிவேடு, அது அ.த.சா.ஆ.160 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**8) வரிசை எண்.22 நகை இருப்பு பதிவேடு, அது அ.த.சா.ஆ.161 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**9) வரிசை எண்.23 வி.குமார் தனது சொந்த பொறுப்பில் வைத்திருந்த சிட்டா,** அது **அ.த.சா.ஆ.162 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**10) வரிசை எண். 24 விவசாய நகைகடன் பதிவேடு, அது அ.த.சா.ஆ.163 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**11) வரிசை எண்.25 விவசாய நகைகடன் பேரேடு, அது அ.த.சா.ஆ.164 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**12) வரிசை எண்.26 நகைக்கடன் பொது பேரேடு, அது அ.த.சா.ஆ.165 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**13) வரிசை எண்.27 நகைக்கடன் பொது பேரேடு, அது அ.த.சா.ஆ.166 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**14) வரிசை எண்.28 தணிக்கை அறிக்கை 2012-2013, அது அ.த.சா.ஆ.167 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

ஆகிய ஆவணங்களையும், மேலும் ரொக்கப்புத்தகங்களையும் துணை தினக்குறிபேடையும் ஆய்வின் போது பார்வையிட்டேன்.

எனது விசாரணையில் எம். சுரேஷ் எழுத்தர் 15.06.2015 ந் தேதிய வாக்குமூலம் 11 பக்கங்கள் வாக்குமூலம் அளித்துள்ளார். மேலும், அவர் வாக்குமூலத்தில் தினகரன் கடிதம் நாள் 21.01.2015 ந் தேதி இணைத்து கொடுத்துள்ளார். **வரிசை எண்.34 எம். சுரேஷ் எழுத்தர் 15.06.2015 ந் தேதிய வாக்குமூலம் 11 பக்கங்கள் மற்றும் தினகரன் கடிதம் நாள் 21.01.201 5 அ.த.சா.ஆ.168 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வணிக குற்ற புலனாய்வு காவல் துறையினர் என்னை விசாரித்தார்கள்.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.06.24 11:31:55 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்